(6 pages) **Reg. No. : .......................................**

**Code No. : 7339** **Sub. Code : PTLE 11**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2020.

First Semester

தமிழ்

Elective : நாட்டார் வழக்காற்றியல் அடிப்படைகள்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. "பழங்காலப் பண்பாட்டு எச்சங்களே நாட்டார் வழக்காறுகள்" என்று கூறியவர்.

(அ) பீட்டர் பெர்சிவல் (ஆ) வில்லியம் ஜான் தாமஸ்

(இ) ரிச்சர்டு எம்.டார்சன் (ஈ) டண்டிஸ்

2. நாட்டார் வழக்காற்றியல் குறித்து வில்லியம் பாஸ்கம் அவர்களின் கருத்து யாது?

(அ) வாய்மொழிக்கலை (ஆ) பண்பாட்டுக் கலை

(இ) எழுத்துக்கலை (ஈ) பேச்சுக்கலை

3. வீரயுகப் பாடல்கள் என்பது ——————ஆகும்.

(அ) கதைப் பாடல் (ஆ) வாய்மொழிப் பாடல்

(இ) தாலாட்டுப் பாடல் (ஈ) கும்மிப் பாடல்

4. 'பழமொழி'–என்ற ஆய்வு நூலின் ஆசிரியர் யார்?

(அ) ஆர்க்கர் டேலர் (ஆ) ஆலன் டண்டிஸ்

(இ) ஜான்ஃஃகெரால்ட் (ஈ) ரிச்சர்டு எம்.டார்சன்

5. பண்பாட்டைச் சார்ந்த நாட்டார் வகைமையை எவ்வாறு அழைப்பார்?

(அ) ஆய்வு வகைமை (ஆ) மரபு வகைமை

(இ) இன வகைமை (ஈ) அமைப்பு வகைமை

6. வாய்மொழி வழக்காறுகளை ——————என்று குறிப்பிடுவர்.

(அ) மன படைப்புகள்

(ஆ) பண்பாட்டு படைப்புகள்

(இ) உளவியல் படைப்புகள்

(ஈ) மானுடவியல் படைப்புகள்

7. இழைவுக் கூறு என்றால் என்ன ?

(அ) ஒலியியல் (ஆ) எழுத்தியல்

(இ) மொழியியல் (ஈ) மரபியல்

8. பாய் முடைதல் தொழில் சிறப்பாக நடைபெற்று வரும் இடம் யாது ?

(அ) காரைக்குடி

(ஆ) கொடைக்கானல்

(இ) மேட்டுப்பாளையம்

(ஈ) பத்தமடை

9. கதைப்பாடல்களில் பல திரிபு வடிவங்களைக் கொண்ட கதைப்பாடல் எது?

(அ) சாஸ்தா கதை (ஆ) முத்துப்பட்டன் கதை

(இ) வன்னிராசன் கதை (ஈ) சின்னத்தம்பி கதை

10. கதைக்கூறுகள், கதைவகை இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் கூறும் நூல் எது?

(அ) தொல் பழங்குடிப் பாடல்

(ஆ) நாட்டார் இலக்கிய கதைக் கூறடை

(இ) நாட்டார் கதைகள்

(ஈ) கதை வகை இலக்கியக் கூறடை

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் <u>250 சொற்களுக்கு</u> மிகாமல் விடை தருக.

11. (அ) நாட்டார் வழக்காறு என்றால் என்ன? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) நாட்டார் வழக்காற்றியலின் அடிப்படைக் கலைச் சொற்களை எழுதுக.

12. (அ) நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுப் புலத்தில் சேகரித்தல் குறித்த செய்திகளைத் தருக.

(அல்லது)

(ஆ) வாய்மொழி வழக்காறுகளின் இயல்புகளை வரையறுக்க.

13. (அ) நாட்டார் வழக்காற்றியலில் யாப்பின் வளர்ச்சியைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நீவிர் அறிந்த புராணக்கதை நாட்டார் வழக்கில் பேசப்படும் விதத்தை எடுத்துரைக்க.

14. (அ) கதை கூறு என்றால் என்ன? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) நாட்டார் வழக்காற்றியலில் இடம் பெறும் கதை வகைகளை எழுதுக.

15. (அ) ‘உற்றுக்கவனித்தல்’–கள ஆய்வு வழிப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) கள ஆய்வில் ‘நேர்காணல்’ முறையினைத் தொகுத்து எழுதுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) நாட்டார் யார்? என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

(அல்லது)

(ஆ) நாட்டார் வழக்காற்றுத் தொடர்பான வரையறைகளைக் கட்டுரைக்க.

17. (அ) நாட்டார் வழக்காற்றியலின் எல்லையும் பரப்பும் குறித்து ஆய்வு செய்க.

(அல்லது)

(ஆ) நாட்டார் வழக்காற்றியலில் இலக்கியத்தின் செல்வாக்கு குறித்து விரிவாக விடையளி.

18. (அ) நாட்டார் வழக்காற்றியல் புலத்தின் படிநிலைகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புராணக் கதை வடிவங்களின் வளர்ச்சியும் மாற்றங்களையும் விளக்குக.

19. (அ) 'இழைவுக்கூறு'– நாட்டார் வழக்காற்றியலில் இடம்பெறும் விதத்தை விவரி.

(அல்லது)

(ஆ) திரிபு வடிவம் பெற்ற நாட்டார் கதைகளை விவரி.

20. (அ) நாட்டார் வழக்காற்று கள ஆய்வில் மேற்கொள்ள வேண்டிய உத்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாட்டார் வழக்காற்று படிமுறைகளைப் பட்டியலிடுக.

———————